**ஆண் :** வார்த்தை
தவறிவிட்டாய்
கண்ணம்மா மார்பு
துடிக்குதடி பார்த்த
இடத்தில் எல்லாம்
உன்னைபோல் பாவை
தெரியுதடி

**ஆண் :** { என்னடி மீனாட்சி
சொன்னது என்னாச்சு } (2)
நேற்றோடு நீ சொன்ன
வார்த்தை காற்றோடு
போயாச்சு

**ஆண் :** என்னடி மீனாட்சி
சொன்னது என்னாச்சு
நேற்றோடு நீ சொன்ன
வார்த்தை காற்றோடு
போயாச்சு

**ஆண் :** { உந்தன் உதட்டில்
நிறைந்திருக்கும் பழரசம்
அந்த மனதில் மறைந்திருக்கும்
துளி விஷம் } (2)

**ஆண் :** நெஞ்சம்
துடித்திடும் நாழி
நீயோ அடுத்தவன்
தோழி

**ஆண் :** என்னை மறந்து
போவதும் நியாயமோ
இந்த காதல் ஓவியத்தின்
பாதை மாறியது காலம்
செய்து விட்ட மாயமோ

**ஆண் :** ஒருமனம்
உருகுது ஒரு மனம்
விலகுது ஹே

**ஆண் :** என்னடி மீனாட்சி
சொன்னது என்னாச்சு
நேற்றோடு நீ சொன்ன
வார்த்தை காற்றோடு
போயாச்சு

**ஆண் :** { அன்பில் விளைந்த
உறவு ஒரு தொடர்கதை
அந்த உறவு உனக்கொரு
சிறுகதை } (2)

**ஆண் :** கண்ணன்
தனிமையிலே பாட
ராதை தன் வழியே ஓட

**ஆண் :** இந்த பிரிவை
தாங்குமோ என் மனம்
ஒரு நூலில் ஆடுகின்ற
ஊஞ்சல்போன்றதடி
நாளும் மாறுகின்ற
உன்மனம்

**ஆண் :** எனக்கு இன்று
புரிந்தது எவன் என்று
தெரிந்தது ஹேய்

**ஆண் :** { என்னடி மீனாட்சி
சொன்னது என்னாச்சு } (2)
நேற்றோடு நீ சொன்ன
வார்த்தை காற்றோடு
போயாச்சு

**ஆண் :** வார்த்தை
தவறிவிட்டாய்
கண்ணம்மா மார்பு
துடிக்குதடி